# உபத்திரவக்கால சம்பவங்கள்

# மகா உபத்திரவக்காலம் (பாகம் 2)

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு !**

இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இதற்கு முந்தைய வேதபாடங்களில், வேதாகம ஆட்சி முறை காலங்கள், சபை எடுத்துக்கொள்ளப்படுதல், அந்திக்கிறிஸ்து, 19 உபத்திரவக்கால சம்பவங்கள், 15 மகா உபத்திரவக்கால சம்பவங்கள் போன்றவற்றை பற்றி படித்தோம். இந்த வேத பாடத்தில் தொடர்ந்து அதற்கு அடுத்தபடியாக மகா உபவத்திரவக்காலத்தில் நடக்கப்போகும் சில சம்பவங்களை படிப்போம்.



## 16. முதலாம் தூதன் நித்திய சுவிசேஷம் அறிவித்தல்

*வெளி 14 : 6 பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து,*
*7 மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது: வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான்.*

இப்போது மனிதர்கள் சுவிசேஷம் பிரசங்கிக்க வேண்டிய காலம். இக்காலத்தின் முடிவில், தூதன் சுவிசேஷம் பிரசங்கிக்கிறான். இந்த தூதன் பிரசங்கிக்கும் சுவிசேஷத்தில் ஒரு முக்கிய காரியம், **“நியாயத்தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்தது”** என்ற அறிவிப்பு.



## 17. இரண்டாம் தூதன் பாபிலோனின் வீழ்ச்சியை அறிவித்தல்

*வெளி 14:8 வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான்.*

இங்கே **“பாபிலோன்”,** உலகத்தை தனது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஒரு மதப்பிரிவை குறிக்கிறது. இப்பிரிவு தனது மதக்கோட்பாடுகளால் சகல ஜாதிகளையும் தன் வசத்தில் வைத்திருக்கும். இம்மதப்பிரிவின் கோட்பாடுகள் முற்றிலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு மாறுபட்டதாக இருக்கும். இக்கோட்பாடுகளை ஜாதிகள் பின்பற்றுவதைத்தான், வேதாகமம் வேசித்தனம் என்று அழைக்கிறது. இதன் வீழ்ச்சி, 7 வது கலசம் ஊற்றப்படும்போது சம்பவிக்கும் *( வெளி 16:17-21; 18:1-24 )*



## 18. மூன்றாம் தூதன் மிருக ஆராதனைக்காரர்களின் அழிவை அறிவித்தல் *( வெளி 14:9-12 ).*

*9 அவர்களுக்குப் பின்னே மூன்றாம்தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ,*
*10 அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.*

இயேசுவின் சுவிசேஷத்தை மறுதலித்து, முதலாம் தூதனுடைய சுவிசேஷத்தையும் ஏற்காமல், அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்குள் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களுக்கு அறிவிக்கப்படும் நித்திய தண்டனை.

## 19. கர்த்தருக்குள் மரிக்கிறவர்களின் ஆசீர்வாதம் பரலோகத்திலிருந்து அறிவிக்கப்படுதல்

*வெளி 14:13 பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று.*



அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்படாமல், மிருகத்தின் முத்திரையை தரிக்காமல் உபத்திரவக்காலத்தில் இரத்த சாட்சிகளாக மரிப்பவர்களுக்காக உரைக்கப்படும் விசேஷித்த ஆசீர்வாதம் இது. *( வெளி 15:2-4; 20:4-6 )*

## 20. மனுஷகுமாரனுக்கொப்பானவர் கையில் கருக்குள்ள அரிவாளோடு பூமியின் பயிர் அறுப்பு. *( வெளி 14:14-16 )*

*14 பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்.*



*16 அப்பொழுது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் நீட்டினார், பூமியின் விளைவு அறுப்புண்டது.*

இக்காட்சி, இயேசு கிறிஸ்து, அந்திக்கிறிஸ்துவின் மேல் நடத்தும் **அர்மகேதோன் யுத்தத்தை** குறிக்கிறது.

*( வெளி 19:21; 2 தெச 2:8 ).*

## 21. தேவாலயத்திலிருந்து கருக்குள்ள அரிவாளோடு வரும் தூதன் பூமியின் திராட்சக்குலைகள் அறுப்பு *( வெளி 14:17-20 )*

*19 அப்பொழுது அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியின்மேலே நீட்டி, பூமியின் திராட்சப்பழங்களை அறுத்து, தேவனுடைய கோபாக்கினை யென்னும் பெரிய ஆலையிலே போட்டான்.*



*20 நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப்பட்டது; அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள்மட்டும் பெருகிவந்தது.*

இதுவும் அர்மகெதோன் யுத்தத்தையும், அப்போது ஒடும் இரத்தத்தையும் குறிக்கிறது.

## 22. தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த 7 பொற்கலசங்கள் *( வெளி 15:1,6-7 ).*

*6 அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளுடைய அவ்வேழு தூதர்களும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள்.*

*7 அப்பொழுது அந்த நான்கு ஜீவன்களில் ஒன்று, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழு தூதர்களுக்குங் கொடுத்தது.*



இங்கே யோவான் மற்றொரு அடையாளத்தை காண்கிறார். இதில் 7 தூதர்களும் தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த 7 பொற்கலசங்களை பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இவைகள் அடுத்து சம்பவிக்கப்போகும் **7 வாதைகளை** குறிப்பிடுகின்றன. நான்கு ஜீவன்களில் ஒன்று இந்த பொற்கலசங்களை தூதர்களுக்கு கொடுக்கிறது. பொல்லாத உலகமானது **"தேவனுடைய உக்கிரமான மதுவை குடிக்கப்போகிறது"** *( வெளி 14:10 ).*

## 23. இரத்த சாட்சிகளின் ஆராதனை *( வெளி 15:2-4 )*

*2 அன்றியும், அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன்.* இங்கே சிங்காசனத்துக்கு முன்பாக இருக்கிற *(வெளி 4 )* தரைப்பரப்பு **கண்ணாடிக்கடல்** போல இருக்கிறது.



தேவனுடைய மகிமையால், சிங்காசனத்தில் இருந்து புறப்படுகிற மின்னல்களால் அது அக்கினி கலந்த வண்ணங்களுடன் ஜொலிக்கிறது. இதன் மேல், அல்லது அருகில் நிற்பவர்கள், **" உபத்திரவக் காலத்தில் மிருகத்துக்கும் அதன் முத்திரைக்கும் நாமத்தின் இலக்கத்துக்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள்".** இவர்கள் தங்கள் ஜீவனையும் பாராதவர்கள் *(வெளி 12:11 ).* இவர்கள் மிருகத்தின் முத்திரையை பெற்றுக்கொள்ளாத படியினால், வாங்கவோ விற்கவோ முடியாமல், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டவர்கள். பலர் கொல்லப்பட்டவர்கள். மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடுகிறார்கள்.

இது இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடலை கடந்த பின், அற்புதமான அவர்களது விடுதலைக்குப்பின், தங்கள் எதிரிகளின் தோல்விக்குப்பின், தேவனை துதித்துப்பாடியதைப் போன்றது *( யாத் 15:1-11 ).* அப்போது ஜெயங்கொண்டவர்கள் **"செங்கடலுக்கு அருகில் நின்று பாடினார்கள்".** இப்போது ஜெயங்கொண்டவர்கள் பரலோகத்தில் இருக்கிற **கண்ணாடிக்கடலுக்கு அருகில் நின்று பாடுகிறார்கள்**.



## 24. பரலோகத்தில் சாட்சியின் கூடார ஆலயம் திறக்கப்படுதல்

*(வெளி 15:5-16:1 ) வெளி 15: 5 இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது;*

இதற்கு முன்பு *வெளி 11:19* ல் பரலோகத்தின் ஆலயம் திறக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் ஆசரிப்புக்கூடாரம், தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது அவை தேவனுடைய மகிமையால் நிறைந்தன *( யாத்: 40:34-35; 2 நாளா 7:1-4 ).* இங்கே இப்போது பரலோக ஆலயத்தில் காணப்படும் புகையும் தேவனுடைய மகிமையால் ஏற்பட்டது.

## தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த 7 பொற்கலசங்கள்
## பூமியின் மேல் ஊற்றப்படுதல்



பரலோக தேவாலயத்தில் இருந்து 7 வாதைகளை உடைய 7 தூதர்களும் மெல்லிய வஸ்திரம் தரித்தவர்களாய் மார்பருகில் பொற்கச்சைகளை கட்டிக்கொண்டு புறப்படுகிறார்கள் *( வெளி 15: 6 ).* நான்கு ஜீவன்களில் ஒன்று 7 பொற்கலசங்களையும் அவர்களுக்கு கொடுக்கிறது *( வச 7 ).* இந்த 7 வாதைகளும் முடியும் வரை ஒருவரும் தேவாலயத்துக்குள் பிரவேசிக்க முடியாமல் இருந்தது *( வச 8 ).* ஒவ்வொரு கலசத்துக்கும் ஒரு குறிப்பிட்ட வாதை இருந்தது. பூமியின் மக்கள் ஏற்கனவே 7 முத்திரைகள், **7 எக்காளங்கள்** போன்றவற்றின் தண்டனைகளால் வாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது தேவனுடைய கடைசி கொடிய தண்டனைகள் பூமியின் மேல் ஊற்றப்படப்போகின்றன.



## 25. முதலாம் கலசம் பூமியின்மேல் ஊற்றப்படுதல். பொல்லாத கொடிய புண்கள் *( வெளி 16:2 ).*

*வெளி 16:2 முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றினான்; உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று.*

இது எகிப்தில் நடந்த **6** வது வாதையைப்போன்றது *( யாத் 9:8-12 ) ( உபா 28:27,35 ).* இப்புண் **"பொல்லாத கொடிய புண்"** என்று அழைக்கப்படுகிறது. முதலாம் தூதனுடைய எச்சரிப்பை அலட்சியம் செய்தவர்களுக்கும் மிருகத்துக்கு கீழ்ப்படிந்தவர்களுக்கும் மாத்திரம் இக்கொடிய புண்ணுண்டாயிற்று *( வெளி 14:6-7 ).* இந்த புண்கள் எளிதில் ஆறிப்போவதில்லை *( வெளி 16:10-11 ).* ஐந்தாவது கலசம் ஊற்றப்படும்போது மக்கள் இப்புண்களால் வரும் வேதனையில் இருந்து மீண்டிருக்க மாட்டார்கள். இப்புண்களை எந்த மருத்துவராலும் குணப்படுத்த முடியாது. மற்ற எந்த வேதனையையும் விட இப்புண்களால் வரும் வேதனை தாங்க முடியாத அளவுக்கு கொடியதாக இருக்கும்.

## 26. இரண்டாம் கலசம். சமுத்திரம் இரத்தமாகுதல்



*வெளி 16:3 இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான்; உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின.*

இது எகிப்தில் நடந்த முதலாம் வாதையைப்போன்றது *( யாத் 7:14 - 25 ).* இரண்டாம் எக்காளம் ஒலித்த போது உலகத்தின் சமுத்திரத்தில் மூன்றில் ஒரு பங்கு இரத்தம் போலாயிற்று. ஆனால் இப்போது உலக சமுத்திரம் முழுவதும் இரத்தம் போலாகி விடும். சமுத்திரத்திலுள்ள அனைத்து உயிரினங்களும் மாண்டு போகும். மனுக்குலத்துக்கு சமுத்திரத்தில் இருந்து கிடைக்கும் மீன் உணவு முற்றிலுமாக நிறுத்தப்படும். சமுத்திரம் முழுவதும் இறந்து போன மீன்களின், உயிரினங்களின் உடல்கள் மிதக்கும்.


## 27. மூன்றாம் கலசம். ஆறுகள் இரத்தமாகுதல் *(வெளி 16:4 - 7 )*

*4. மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான்; உடனே அவைகள் இரத்தமாயின.*



இதுவும் எகிப்தில் நடந்த முதல் வாதையைப்போன்றது *( யாத் 7:14 - 25 ).* மூன்றாம் எக்காளத்தினால் உலகத்தில் உள்ள தண்ணீரில் மூன்றில் ஒரு பங்கு கசப்பானது. ஆனால் இப்போது உலகத்தின் அனைத்து குடிதண்ணீரும் இரத்தமாகி விட்டது. ஊற்றுக்கள், கிணறுகள், நீரோடைகள், ஆறுகள், அணைநீர், பூமியின் அடியில் இருந்து வரும் தண்ணீர் அனைத்தும் இரத்தமாய் இருக்கும். இதன் துர்நாற்றமும் பயங்கரமாக இருக்கும். மனிதரும், பறவைகளும், விலங்கினங்களும் தண்ணீர் குடிக்க முடியாமல் தவிக்க வேண்டியதாயிருக்கும். இதனால் தண்ணீர் குடிக்க முடியாமல் பலர் அல்லல் பட்டு கொடூரமாக மரிக்க வேண்டியதாயிருக்கும்.

*5,6* ம் வசனங்களில் இதை தண்ணீர்களின் தூதன் நியாயப்படுத்துகிறான். இவ்வுலகம் தேவனுடைய மக்களின் இரத்தத்தை எப்போதும் சிந்தியது. ஆனால் இப்போது உலகம் இரத்தத்தை மாத்திரமே குடிக்க வேண்டியதாக இருக்கும். அவர்கள் அப்படி குடிக்க வேண்டியது தேவனுடைய நியாயத்தீர்ப்பு. ஆம், நம் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கள் என்றும் நீதியானவைகளாகவே இருக்கும் *(வச 7 ).*



## 28. நான்காம் கலசம். மிகுந்த வெப்பம் *வெளி 16:8 நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன்மேல் ஊற்றினான்; தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.*

*9. அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல் அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை.*

உலகத்தின் அனைத்து உயிரினங்களும் சூரிய வெப்பத்தையே மையமாகக்கொண்டு ஜீவிக்கின்றன. ஏற்கனவே குடிக்க தண்ணீர் இல்லாத அவலம். இப்போது சூரியன் கடுமையாக வெப்பமடையும். சூரியனில் இருந்து வரும் வெப்பம் **"சூளைத்தீயைப்போல"** இருக்கும் *( மலா 4:1 ).* இது நரக வெப்பத்தின் ஒரு முன் மாதிரியாக இருக்கும். இதையெல்லாம் கண்ட பின்னும் மக்கள் மனந்திரும்பாமல் தேவனுடைய நாமத்தை தூஷிப்பார்கள். அது இன்னும் கடுமையான தண்டனைகளை அவர்கள் மேல் கொண்டு வரும்.

## 29. ஐந்தாம் கலசம். மிருகத்தின் ராஜ்யம் முழுவதும் இருள்

*வெளி 16:10 ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது; அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு, 11. தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை.*

இது எகிப்தில் சம்பவித்த ஒன்பதாவது வாதையைப்போன்றது *( யாத் 10:21-22 ).* இந்த இருள் மிருகத்தின் ராஜ்யத்தில் மாத்திரம் இருக்கும். மிருகத்தின் சிங்காசனம் இச்சமயத்தில் எருசலேமில் இருக்கலாம். மக்கள் மிகுந்த உபத்திரவத்தை இப்போது இருளில் அனுபவிப்பார்கள். இது நரக இருட்டின் ஒரு முன்மாதிரியாகவும் இருக்கும். நாவுகளை கடித்துக் கொள்ளும் அளவுக்கு மனிதனின் வேதனை இருக்கும்.



## 30. ஆறாம் கலசம். ஐபிராத் நதி வற்றிப்போகுதல்.

*வெளி 16:12 ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று.*

இச்சமயத்தில் அர்மகெதோன் யுத்தத்துக்காக ஒரு பெரிய சேனை தயாராகிக்கொண்டிருக்கும். உலக நாடுகள் பலவும் வந்து அந்திக்கிறிஸ்துவுடன் சேர்ந்து கொள்ள தங்கள் படைகளை தயாராகிக்கொண்டிருக்கும். இப்போது " **கிழக்கில் உள்ள ராஜாக்கள்** " பாலஸ்தீனுக்குள் வருவதற்கு வசதியாக ஐபிராத் நதி வற்றிப்போகும். *( யாத் 14:13-22; யோசுவா 3:4 ).*



## 31. தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள். அர்மகெதோன் யுத்தத்துக்கு ராஜ்யங்கள் ஆயத்தப்படுதல் *(வெளி16:13-16 ).*

*13. அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன்.*

*14. அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது.*

**வலுசர்ப்பம் ( சாத்தான் ), மிருகம் ( அந்திக்கிறிஸ்து ), கள்ளத்தீர்க்கதரிசி ( இரண்டாம் மிருகம் )** - இவர்களின் வாயில் இருந்து புறப்படும் ஆவிகள்தான் மனிதர்கள் மூலமாக பூமியின் ராஜாக்களுக்கு முன்பாக அற்புதங்களை செய்யும். அதன் மூலமாக இயேசுவோடு யுத்தம் செய்ய அவர்கள் அனைவரையும் இந்த ஆவிகள் வசியப்படுத்தும். இந்த அற்புதங்களை பார்த்து முதலில் அந்திக்கிறிஸ்துவுடன் சேர்ந்திராத பல ராஜாக்களும் அவனுடன் சேர்ந்து கொள்வர்.

இந்த ஆவிகள் பூமியில் உள்ள ராஜாக்கள் அனைவரையும் அர்மகெதோன் யுத்தத்துக்கு சேர்க்கும்படி கிரியை செய்யும். இப்படித்தான் அர்மகெதோன் யுத்தத்துக்கு ராஜாக்கள் ஆயத்தமாக்கப்படுவார்கள் *( வெளி 19:11-21 ).* இவ்வாறாகத்தான் பழைய ஏற்பாட்டிலும் ஆகாப் யுத்தத்துக்காக வஞ்சிக்கப்பட்டு பின் அழிந்தான் *( 2 நாளா: 18: 18-22 ).*



## 32. ஏழாம் கலசம். மகா பூமியதிர்ச்சி.

**மகா பாபிலோனும் மற்ற நகரங்களும் அழிக்கப்படுதல்** *( வெளி 16:17-21; 18:1-24 ).*

*17 ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து: ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது.*

*18 சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை*

*19 அப்பொழுது மகா நகரம் மூன்றுபங்காகப் பிரிக்கப்பட்டது, புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகாபாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான*






*கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்குமுன்பாக நினைப்பூட்டப்பட்டது.*

*20 தீவுகள் யாவும் அகன்றுபோயின; பர்வதங்கள் காணப்படாமற்போயின.*

*21 தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது; அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்; அந்த வாதை மகா கொடிதாயிருந்தது.*

**“மகா நகரம்”** என்பது எருசலேம் நகரத்தை குறிக்கிறது ***( வெளி 11:8 ).*** இந்த மகாப்பெரிய பூமியதிர்ச்சியினால் எருசலேம் நகரம் மூன்று பாகங்களாகப்பிரிக்கப்படும் ***( சக 14:4 ).*** மகா பாபிலோன் நகரம் வீழும் ***( வச 19 ).*** பல மலைகள் வீழ்ந்து போகும். பல தீவுகள் நில நடுக்கத்தினால் இடம் பெயர்ந்து போகும். ஒரு தாலந்து ( சுமார் **51.700** கிலோகிராம் - **114** பவுண்டு ) எடையுள்ள கல் மழை வானத்தில் இருந்து விழும். இப்படிப்பட்ட கல்மழையினால் கொடிய அழிவுகள் நேரிடும். இந்த வாதை **“ மகா கொடியதாக “** இருக்கும்.



## 33. பூமியின் ராஜாக்கள் மகாவேசியோடு (ஒரு மதப்பிரிவு) வேசித்தனம் *(வெளி 17:1-5 )*

*1 ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம்பண்ணினார்களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே;*



***வெளி 17*** ல் குறிப்பிடப்பட்டுள்ள **“ மகா வேசி “** ஒரு குறிப்பிட்ட மதப்பிரிவு ஆகும். வேதாகமத்தில் தேவனுடைய உண்மையான திருச்சபை **“ கற்புள்ள கன்னிகை “** என்று அழைக்கப்படுகிறது ***( வெளி 19:7-8; 2 கொரி 11:2 ).***

வேதாகமத்தில் பல இடங்களிலும் வேசித்தனம் என்பது **“ தேவனோடு உறவு வைக்காமல், மற்ற தேவர்களோடும் மதச்சம்பிரதாயங்களோடும் உறவு வைத்து விக்கிரக ஆராதனை செய்வது “** என்ற அர்த்தத்தில் **“ மத சம்பந்தப்பட்ட வேசித்தனம்”** என்பதை குறிப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது ***( ஏசாயா 23:17; 57:3-7; எரே 3:2-9; எசே 16:1-63 ).*** ஆகவே வெளிப்படுத்தின விசேஷம் முழுவதையும் ஆராய்ந்து பல வேத பண்டிதர்களும் இந்த **“மகா வேசி “** என்பது ஒரு **“மதப்பிரிவு”** என்று கருதுகிறார்கள். இதைப்பற்றிய பல காரியங்கள் ***வெளி; 17*** ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இச்சமயத்தில் பல ராஜாக்கள் இம்மதப்பிரிவின் அதிகாரத்தின் கீழ் இருப்பார்கள்.



## 34. மகாவேசி பரிசுத்தவான்களை கொல்லுதல் *(வெளி 17:6-7 ).*

*6.அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்.*

இந்த மதப்பிரிவுக்கு உட்படாத, அதை எதிர்க்கும் பல பரிசுத்தவான்களை இந்த மதப்பிரிவு கொல்லும். முதல் 3 ½ வருட உபத்திரவக்காலத்தில் பல பரிசுத்தவான்கள் இரத்த சாட்சியாக மரிப்பார்கள்.




## 35. எட்டாவது ராஜ்யம் உருவாக்கப்படுதல் *(வெளி 17:8-13 ).*

*11 இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும், நாசமடையப்போகிறவனுமாயிருக்கிறான்.*

மீண்டும் உருவாக்கப்படப்போகிற ரோம சாம்ராஜ்யத்தின் 10 ராஜ்யங்களில் ஒன்றில் இருந்து அந்திக்கிறிஸ்து வருவான். அவன் பின் அந்த ராஜ்யங்களில் மூன்றை முறியடிப்பான். மீதி இருக்கும் 7 ராஜ்யங்களும் அவனுக்கு அடிபணியும். இந்த ராஜ்யங்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டு 8 வது ராஜ்யம் உருவாக்கப்படும். இது மீண்டும் உருவாக்கப்பட்ட கிரீஸ் சாம்ராஜ்யமாக இருக்கும். இதுதான் மகாவேசி அமர்ந்திருக்கும் மிருகம்.

## 36. ஆட்டுக்குட்டியானவருடன் யுத்தம்




*வெளி 17:14 இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான்.*

உபத்திரவக்காலத்தின் முதல் மூன்றரை வருடங்கள் இவர்கள் தனித்தனியாக ஆளுகை செய்வார்கள். பின் கடைசி மூன்றரை வருடங்கள் அந்திக்கிறிஸ்துவுக்கு தங்கள் அதிகாரத்தை கொடுப்பார்கள் *( வெளி 17:10-17; 13:5 ).* இவர்கள் அர்மகெதோன் யுத்தத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு எதிராக போராடுவார்கள் *( வெளி 19:19-21; தானி 7:23-27; 8:20-25; 11:45; 12:7 ).*

## 37. மகாவேசியோடு யுத்தம் *( வெளி 17:15-18 ).*



*16 நீ மிருகத்தின்மேல் கண்ட பத்துக் கொம்புகளானவர்கள் அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப்போடுவார்கள்.*

மகாவேசியின் ( ஒரு மதப்பிரிவு ) அதிகாரத்தின் கீழ் இருக்கும் 10 ராஜாக்களும் உபத்திரவக்காலத்தின் நடுவில் இந்த மகாவேசியை வெறுக்கத்தொடங்குவார்கள். அதை தொடர்ந்து இந்த 'மதப்பிரிவை" அழிப்பார்கள். பின் தங்கள் அதிகாரத்தை அந்திக்கிறிஸ்துவுக்கு கொடுப்பார்கள். இப்படியாகத்தான் **"மகாவேசி"** அழிக்கப்படுவாள்.

-----------------------------

**இத்தகைய மகாக்கொடிய உபத்திரவக்காலத்துக்கு தப்பி, எடுத்துக்கொள்ளப்பட ஆயத்தமாயிருப்போம்....... மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம்**

***குறிப்பு: இதன் தொடர்ச்சியாக*** **- இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அர்மகெதோன் யுத்தம், ஆயிர வருட அரசாட்சி, கோக் மகோக் யுத்தம், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு - போன்ற வேதபாடங்கள் வெளியிடப்படும். தயவு செய்து தொடர்ந்து படித்து பயனடையுங்கள்.**

இதற்கு முன்பு தொடர்ச்சியாக வேதாகம ஆட்சி முறைக்காலங்கள், சபை எடுத்துக்கொள்ளப்படுதல், அந்திக்கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள் ஆகிய வேதபாடங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**உபத்திரவக்கால சம்பவங்களைப்பற்றியதான வீடியோவை - (Power point slide show with narration and Bible references in Tamil) நம்முடைய இணையதளத்தின் "வீடியோ" பகுதியிலேயோ அல்லது http://www.youtube.com/watch?v=j3fJtehXe_A என்ற இணைப்பிலோ பார்வையிடும்படி உங்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**Bro D.Vergin Kumar.**
If you need any clarifications, if you have any doubts kindly contact me at deeveekumar@yahoo.com
Ph: 968 25572195, 99663557.

Resources; International Standard Bible Encyclopedia, The Bible Exposition commentary - New Testament, Dakes bible commentary, Andrew Wommack Bible commentary, Vine's Expository Dictionary of Old Testament Words, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible Concordance, Vincent's Word Studies in the New Testament, Scofield's Bible Dispensational Plan. Wuest's word studies from the Greek New Testament. The Biblical Illustrator (New Testament). All Bible quotes are from King James Version. In Tamil Bible, some verses may be above or below than the mentioned English Bible verse.

-------------------------